salona Cotspin LIMITED

"Shree Sakthi Kunj"
9, Ramalinga Nagar, IV Cross, S.B. Colony,
Coimbatore - 641 011. Tamil Nadu, INDIA
✆ Off : 0422 - 2454415
Email : info@salonagroup.com
Web : www.salonagroup.com

July 03, 2026

To

The Listing Department,
National Stock Exchange of India Limited
Exchange Plaza, Bandra – Kurla Complex,
Bandra (E), Mumbai - 400 051
SYMBOL - SALONA

Dear Sir/Madam

Sub: Copies of Newspaper publication under Regulation 30

Pursuant to provisions of Regulation 30 read with Schedule III of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we enclose herewith the copies of the newspaper advertisement published by the Company in the following newspapers on regarding the opening of a special window for re-lodgement of transfer requests for physical shares, in accordance with SEBI Circular No. HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026 dated January 30, 2026 and the 'Second 100 Days campaign - "Saksham Niveshak" launched for creating awareness among shareholders to update the KYC details and to prevent transfer of unpaid/unclaimed dividends to Investor Education and Protection Fund ('IEPF').

i. English – Trinity Mirror
ii. Tamil – Makkal Kural

The above information is also available on the website of the Company www.salonacotspin.com.

This is for your information and records.

Yours Truly,

For **Salona Cotspin Limited**

SALONA COTSPIN LIMITED COIMBATORE - 641 011

Rajkumari R
Company Secretary & Compliance Officer

Encl.: as above



Thiagarajar Polytechnic College welcomes freshers

Salem, July 3: The 69th first-year students' induction programme and the Memorandum of Understanding (MoU) signing ceremony between Sona Institutions and King Makers IAS Academy were held at Thiagarajar Polytechnic College in Salem.

N. Gunavarthini, Superintending Engineer, Salem Electricity Board, attended the function as the chief guest and delivered the inaugural address. D. Manoharan, Head of the Production Engineering Department at Bord India, Chennai, delivered the special address.

College Chairman C. Valliyappa said the institution has been providing quality technical education for the past 69 years and that its alumni are serving in senior positions in leading companies across several countries. He advised students to make full use of the college's modern technological facilities and excel in both academics and skills.

Vice Chairmen Sokku Valliyappa and Thiagu Valliyappa stressed that students should continuously upgrade their skills in line with technological advancements and actively participate in industry-oriented projects and start-up initiatives.College Director V. Karthikeyan and Principal (In-charge) Dr. A. Kanagaraj explained the college's growth, student achievements, scholarships and future development plans.

As part of the event, Sona Institutions and King Makers IAS Academy signed a Memorandum of Understanding, which will enable students to receive training and guidance for competitive examinations, including UPSC and TNPSC.The college's alumni also shared their academic and professional experiences, motivating the first-year students. More than 2,000 first-year students and their parents participated in the programme.



Child trafficking prevention awareness seminar held

Krishnagiri, July 3: An awareness seminar marking Child Trafficking Prevention Day was held at the Jegadab Government High School near Kaveripattinam in Krishnagiri district. The programme was organised jointly by the Krishnagiri District Administration and the Gramiya Pengal Trust. The event was presided over by Headmaster Nandakumar. District Social Welfare Officer Sakthi Subashini, who participated as the special guest, created awareness among students and the public on child safety, safe upbringing of children and preventive measures to curb child trafficking. During the programme, Child Protection Officer Kasthuri, Child Welfare Committee Member Mohan, and District Child Rights Project Coordinator Senthilraja spoke about preventing child trafficking and the importance of child protection. Participants also took a pledge on preventing child trafficking. Earlier, Utharakumar welcomed the gathering, while Varalakshmi proposed the vote of thanks.

ITI admission deadline extended till July 31

Erode, July 3: The last date for applying for direct admission to the 2026–27 academic year at the Government Industrial Training Institutes (ITIs) in Erode (Kasipalayam) and Gobichettipalayam (Periya Kodiveri) has been extended till July 31.

According to a statement issued by the district administration, candidates who have passed Class 10 or higher are eligible to apply for two-year trades including Electrician, Fitter, Mechanic Motor Vehicle, Refrigeration and Air Conditioning Technician, Turner, Machinist, COPA, Draughtsman (Civil) and Textile Wet Processing Technician. Candidates who have passed Class 8 are eligible to apply for the Wireman trade.

Students can also enrol in new trades offered through upgraded technology centres established in collaboration with Tata Technologies, including Advanced CNC Machining Technician, Mechanic Electric Vehicle, Manufacturing Control and Automation, Industrial Robotics and Digital Manufacturing Technician, and Basic Designer and Virtual Verifier.

Students admitted to these courses will receive free training, free hostel accommodation, a monthly stipend of Rs.750 from the Tamil Nadu Government, and an additional Rs.1,000 per month for eligible students under the Tamil Pudhalvan and Pudhumaipen schemes. They will also be provided with free textbooks, bicycles, drawing instruments, uniforms, footwear, and free bus travel passes.

For further details, candidates may visit the Government ITIs at Gobichettipalayam and Erode in person or contact the respective institute office telephone numbers, Erode District Collector Kandasamy said.



Sanitation worker honoured on retirement

Mettupalayam, July 3: A retirement felicitation function was held for Muthammal, who retired after serving as a sanitation worker for 20 years in Jadayampalayam Panchayat, under Karamadai Panchayat Union in Coimbatore district. The function was held at the Jadayampalayam Panchayat Office and was presided over by Rajkumar, Zonal Deputy Block Development Officer, Karamadai Panchayat Union. Panchayat Secretary Nandhini welcomed the gathering.

During the event, Muthammal was honoured with a shawl and presented with a memento in recognition of her two decades of dedicated service. Speaking on the occasion, Muthammal said, "I am happy to have served as a sanitation worker in the panchayat for the past 20 years.

Though I have retired from service, I will continue to serve society." Panchayat office staff, sanitation workers and members of the public participated in the function.



Freshers' welcome programme held at Hindusthan College of Arts and Science

Coimbatore, July 3: A welcome programme for first-year students was held at Hindusthan College of Arts and Science in Coimbatore.

The chief guest, Dr. Kavithasan, Director of Roots Industries and a renowned thinker and poet, addressed the students. He encouraged them to persevere in their efforts and never give up, emphasising that consistent hard work leads to success. He also urged students to respect the nation, cherish the Tamil language, listen to their parents and teachers, and grow into disciplined and responsible individuals.

MSME Training Coordinator Rajesh Kumar encouraged students to develop an entrepreneurial mindset and aspire to become entrepreneurs. Dr. Vidhya Sreekanth, speaker from Veranda Enterprises, advised students to pursue professional qualifications such as CMA, CA and ICAI alongside their regular academic studies to enhance their career prospects.

Motivational speaker Sivakumar also addressed the gathering and inspired the students.

Speaking on the occasion, College Administrative Trustee Saraswathi Kannaiyan said the institution considers its students as its own children and is committed to supporting their academic and personal growth.Joint Secretary Priya Satish Prabhu also attended the function.Earlier, College Principal Ponnusamy welcomed the gathering, while Priya Thomas, Head of the Department of English, proposed the vote of thanks.

Applications invited for teacher posts in Karur school

Karur, July 3: Applications have been invited to fill the vacant Post Graduate Teacher (Zoology and Chemistry) posts on a temporary consolidated pay basis at the Government Adi Dravidar Welfare Higher Secondary School in Chinnamanayakkanpatti, Karur district.

The school, functioning under the Adi Dravidar Welfare Department, will fill the vacancies temporarily through the School Management Committee. Candidates possessing the required educational qualifications for the Post Graduate Teacher posts are eligible to apply.

Applicants should submit written applications along with copies of their educational qualification certificates either in person or by post between July 3 and July 7.

Applications should be sent to the District Adi Dravidar and Tribal Welfare Office, District Collectorate Campus, First Floor, Room No.114, Karur – 639007.The information was announced by Karur District Collector Muthukumaran.

NAME CHANGE

I, BOOPATHI THANGAVEL, D/o.PONGIYANNAN, BORN ON : 20/01/1993, (Place of Birth: ERODE) RESIDING AT: 129, THANNAACIPATTI, PANDIAMPALAYAM, KAVANDAPADI, BHAVANI, ERODE- 638455. Shall henceforth be known as **BOOPATHI GOUNDER PONGIYANNAN**

BOOPATHI THANGAVEL

NAME CHANGE

I, SHAKILA BANU, W/o. ABDUL NASAR, BORN ON : 19.11.1972, (Place of Birth: Salem) RESIDING AT: 72, Millath Nagar, Jagir Ammapalayam, Salem-636302. Shall henceforth be known as **SALIHA BANU MOHAMMED ZAKKARIYA**

SHAKILA BANU

NAME CHANGE

I, SUKUMAR KURANE Father of Service No 2619796A LNK MALAPPA KURANE presently residing, Village: Pattankudi, Post : Pattankudi, Tehsil – Chikodi, Dist – Belagavi, State – Karnataka, Pin – 591238, changed my name from **SUKUMAR to SUKUMAR KURANE** vide affidavit dt 3rd Jul 2026 before Devarajan, Advocate and Notary, Udhagamandalam, The Nilgiris, Tamilnadu

NAME CHANGE

I, RAKSHANADEVI M T daughter of Service No 2610476K HAV C MARIMUTHU presently residing, Village: Chinnapoolampatti, Post : Mangalarevu, Tehsil – Peraiyur, Dist – Madurai, State – Tamilnadu, Pin – 625703, changed my name from **MT RAKSHANA DEVI to RAKSHANADEVI M T** vide affidavit dt 3rd Jul 2026 before Devarajan, Advocate and Notary, Udhagamandalam, The Nilgiris, Tamilnadu.

NAME CHANGE

I, Service No JC442029X Rank Sub name S Keppusamy, presently residing at House No-148/4 Near Bus Stand - Street, Sankara Puram - Vill & PO, Bodinayakkanur - PS, Uthamapalayam- Teh, Theni - Dist, Tamil Nadu - 625530, have changed my son's name from **K AKILESH to AKILESH K** vide Affidavit dt 3rd Jul 2026 before Devarajan, Advocate and Notary, Udhagamandalam, The Nilgiris, Tamilnadu.

NAME CHANGE

I, PARUBAI KURANE Mother of Service No 2619796A LNK MALAPPA KURANE presently residing, Village: Pattankudi, Post : Pattankudi, Tehsil – Chikodi, Dist – Belagavi, State – Karnataka, Pin – 591238, changed my name from **PARVATI to PARUBAI KURANE** vide affidavit dt 3rd Jul 2026 before Devarajan, Advocate and Notary, Udhagamandalam, The Nilgiris, Tamilnadu

NAME CHANGE

I, NALLAKOYA KERAKKADA Father of Service No 2616505K SEP SHAMSUDDEEN K P presently residing, Village: Androth, Post : Androth, Tehsil – Androth, Dist – Lakshwadeep, State – Lakshwadeep, Pin – 682551, changed my name from **NALLAKOYA K K to NALLAKOYA KERAKKADA** vide affidavit dt 3rd Jul 2026 before Devarajan, Advocate and Notary, Udhagamandalam, The Nilgiris, Tamilnadu.

NAME CHANGE

I, Service No JC442029X Rank Sub name S Keppusamy, presently residing at House No-148/4 Near Bus Stand - Street, Sankara Puram - Vill & PO, Bodinayakkanur - PS, Uthamapalayam- Teh, Theni - Dist, Tamil Nadu - 625530, have changed my Daughter's name from **K MADHUMIDHA to MADHUMITHA K** vide Affidavit dt 3rd Jul 2026 before Devarajan, Advocate and Notary, Udhagamandalam, The Nilgiris, Tamilnadu.

NAME CHANGE

I, DEIVANAI M Mother of Service No JC-442282Y SUB SETTU M presently residing, Village: Thiruvalam plantation, Post : Tiruvalam, Tehsil – Katpadi, Dist – Vellore, State – Tamilnadu, Pin – 632515,, changed my name from **DAIVANI to DEIVANAI M** vide affidavit dt 3rd Jul 2026 before Devarajan, Advocate and Notary, Udhagamandalam, The Nilgiris, Tamilnadu

NAME CHANGE

I, MAGESWARI (GIVEN NAME), RAJAKANNU (SURNAME), W/O. DAVIDSON, Born on 04/06/1964, (Place of Birth: CHENNAI, TAMILNADU) Residing at, ARK COTTAGE, NO.43, SENGAPPA KONAR STREET, KURICHI, SUNDARAPURAM, COIMBATORE – 641024, TAMILNADU, Shall henceforth be known as **PRISCILLA (GIVEN NAME), DAVIDSON (SURNAME)**

MAGESWARI (GIVEN NAME), RAJAKANNU (SURNAME)

NAME CHANGE

I, Service No JC442029X Rank Sub name S Keppusamy, presently residing at House No-148/4 Near Bus Stand - Street, Sankara Puram - Vill & PO, Bodinayakkanur - PS, Uthamapalayam- Teh, Theni - Dist, Tamil Nadu - 625530, have changed my Daughter's name from **SUSMITHA to SUSMITHA K** vide Affidavit dt 3rd Jul 2026 before Devarajan, Advocate and Notary, Udhagamandalam, The Nilgiris, Tamilnadu.

NAME CHANGE

I, ISMAIL (GIVEN NAME), VADAKKANCHERRY IBRAHIM (SURNAME), S/O.IBRAHIM, Born on 03/05/1958, (Place of Birth: OOTY, THE NILGIRIS-DT, TAMILNADU), Residing at, 8/1A, PAKKUKARA STREET, METTUPALAYAM, COIMBATORE – 641301, TAMILNADU, Shall henceforth be known as **MOHAMED ISMAIL (GIVEN NAME), VADAKKANCHERRY IBRAHIM (SURNAME)**

ISMAIL (GIVEN NAME), VADAKKANCHERRY IBRAHIM (SURNAME)

NAME CHANGE

I, MAHA SRIDHAR M T Son of Service No 2610476K HAV C MARIMUTHU presently residing, Village: Chinnapoolampatti, Post : Mangalarevu, Tehsil – Peraiyur, Dist – Madurai, State – Tamilnadu, Pin – 625703, changed my name from **MT MAHA SRIDHAR to MAHA SRIDHAR M T** vide affidavit dt 3rd Jul 2026 before Devarajan, Advocate and Notary, Udhagamandalam, The Nilgiris, Tamilnadu

NAME CHANGE

I, K V DHAMODHARAN Father of Service No 2613167M HAV SHYJU K C presently residing, Village: Thannada , Post : Chala east, Tehsil – Kannur, Dist – Kannur, State – Kerala, Pin – 670621, changed my name from **KV DAMODARAN to K V DHAMODHARAN** vide affidavit dt 3rd Jul 2026 before Devarajan, Advocate and Notary, Udhagamandalam, The Nilgiris, Tamilnadu.

NAME CHANGE

I, M PRIYA, is legally wedded spouse of Service No JC442029X Rank Sub Name S Keppusamy, presently residing at House No-148/4, Near Bus Stand - Street. Sankara Puram-Vill & PO, Bodinayakkanur - PS, Uthamapalayam - Teh, Theni - Dist. Tamil Nadu 625530, have changed my name from **M PRIYA to PRIYA KEPPUSAMY** respectively vide Affidavit dt 3rd Jul 2026 before Devarajan, Advocate and Notary, Udhagamandalam, The Nilgiris, Tamilnadu.

SALONA COTSPIN LIMITED

CIN - L17111TZ1994PLC004797

Registered Office : SF NO 74/12 & 75/3, Sathy Road, Pungampalli Village, Sathyamangalam – 638402

Website – www.salonacotspin.com, Phone – 0422-2454415

SPECIAL WINDOW FOR RE-LODGEMENT OF TRANSFER REQUEST OF PHYSICAL SHARES

Pursuant to SEBI Circular No. HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026 dated January 30, 2026, Shareholders are informed that a Special Window has been opened for a period of one year from February 5,2026 to February 04, 2027, for the re-lodgement of transfer requests for physical share certificates. The facility is applicable to cases which were lodged prior to deadline of April 01, 2019, and the original share transfer were rejected/ returned/not attended due to deficiencies in documents or process or otherwise. The shares re-lodged for transfer will be processed only in dematerialized form during this window. Eligible shareholders may submit their transfer request along with the requisite documents to MUFG Intime India Private Limited, Company's Registrar and Share Transfer Agent ("RTA").

SECOND 100 Days Campaign- Saksham Niveshak for KYC and other related updation and shareholders engagement to prevent transfer of Unpaid/Unclaimed dividends to IEPF.

The Investor Education and Protection Fund (IEPF) has initiated second 100-day campaign titled "Saksham Niveshak" for KYC and related updations to facilitate claims of unpaid/unclaimed dividends. The campaign is running for a period of 100 Days from April 01, 2026 to July 09, 2026. Shareholders with unpaid/unclaimed dividends, are requested to update their KYC, Nomination Details, or have any issues or queries related to unpaid dividends and shares, can reach out to the Company's Registrar & Share Transfer Agent and for forms available online, the QR-Code can be scanned.

The details of the above Campaign and procedure for updation / registration of KYC Details are made available at Company's website https://www.salonacotspin.com/investors/

Registrar & Share Transfer Agent:
MUFG Intime India Private Limited
Address: Surya, 35, Mayflower Avenue, Behind Senthil Nagar,
Sowripalayam Road, Coimbatore – 641028, Tamil Nadu.
E-mail : coimbatore@in.mpms.mufg.com, Phone: 0422-4958995, 2539835.

For **Salona Cotspin Limited**
Sd/-
Rajkumari R
Company Secretary

Place : Coimbatore
Date : July 03, 2026

தஞ்சாவூர், ராணிப்பேட்டை, திருச்சி உட்பட

10 மாவட்ட அண்ணா தி.மு.க. நிர்வாகிகளுடன் 6 முதல் 9–ந் தேதி வரை எடப்பாடி பழனிசாமி ஆலோசனை

சென்னை, ஜூலை 3–

சென்னையில் வரும் 6–ந் தேதி முதல் 9–ந் தேதி வரை தஞ்சாவூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர், திருச்சி உட்பட 10 மாவட்ட அண்ணா தி.மு.க. நிர்வாகிகளுடன் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்துகிறார்.

இதுகுறித்து அண்ணா தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:–

6–ந் தேதி திங்கள் காலை 10 மணி – தஞ்சாவூர் மாநகர், தஞ்சாவூர் கிழக்கு, காலை 11.30 மணி – தஞ்சாவூர் மத்தியம், தஞ்சாவூர் தெற்கு, மாலை 4.30 மணி – சிவகங்கை மாவட்டம்.

7–ந் தேதி செவ்வாய் காலை 10 மணி – இராணிப்பேட்டை கிழக்கு, இராணிப்பேட்டை மேற்கு, காலை 11.30 மணி – திருப்பத்தூர், மாலை 4.30 மணி – திருவள்ளூர் வடக்கு, திருவள்ளூர் மத்தியம்.

8–ந் தேதி புதன் காலை 10 மணி – திருச்சி மாநகர், திருச்சி புறநகர் வடக்கு, காலை 11.30 மணி – திருச்சி புறநகர் தெற்கு, திருச்சி புறநகர் கிழக்கு, மாலை 4.30 மணி – திருநெல்வேலி மாநகர், திருநெல்வேலி புறநகர் மாவட்டம்.

9–ந் தேதி வியாழன் காலை 10 மணி – கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, காலை 11.30 மணி – தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, மாலை 4.30 மணி – ஈரோடு மாநகர் மாவட்டம்.

இந்த ஆலோசனைக் கூட்டங்களில், நடந்து முடிந்த சட்டமன்றப் பொதுத் தேர்தல் முடிவுகள் குறித்தும்; கழகத்தின் ஆக்கப்பூர்வமான வளர்ச்சிப் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளது.

ஆகவே, சம்பந்தப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், நடந்து முடிந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்கள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூராட்சி, பகுதிக் கழகச் செயலாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், கழக சார்பு அமைப்புகளின் மாநில துணை நிர்வாகிகள், சார்பு அமைப்புகளின் மாவட்டச் செயலாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய, நகர, பேரூராட்சி மன்றத் தலைவர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சுயலாபத்திற்காக ஆளும் கட்சியை நாடி ஓடும் கோயபல்ஸ் கூட்டத்திற்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்

அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி கடும் கண்டனம்

சென்னை, ஜூலை 3–

சுயலாபத்திற்காக ஆளும் கட்சியை நாடி ஓடும் கோயபல்ஸ் கூட்டத்திற்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என்று அண்ணா தி.மு.க. கடும் விமர்சித்துள்ளது.

இதுகுறித்து முன்னாள் அமைச்சரும், விவசாயப் பிரிவுச் செயலாளருமான அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

ஒரே பொய்யை திரும்பத் திரும்பச் சொன்னால் அது உண்மையாகிவிடும்' என்ற தத்துவத்தை கடைபிடித்தவன் கோயபல்ஸ்'.

தமிழக அரசியலிலும், அகில இந்திய அரசியலிலும் பல்வேறு காலக்கட்டங்களில் ஒருசில அரசியல்வாதிகள் கோயபல்ஸ் வேடம் பூண்டு, அவர்கள் முயற்சியில் தோல்வியும் கண்டதுண்டு. இன்றைய சூழ்நிலையில், தமிழக அரசியல் வானில் பல கோயபல்ஸ்கள் வட்டமிட்டு வருகின்றனர். அவர்கள் நம்முடைய இயக்கத்தில் இதுநாள்வரை சார்ந்திருந்தனர் என்பதுதான் வேதனைக்குரியதாகும்.

அண்ணா தி.மு.க. தோற்றுவிக்கப்பட்ட பின்பு, நம்மையெல்லாம் ஆளாக்கிய புரட்சித் தலைவரும், அவருக்குப் பின்னால் நம்மைக் காத்து நின்ற புரட்சித் தலைவி அம்மாவும், பல்வேறு சோதனைகளையும், தேர்தல் களத்தில் பின்னடைவுகளையும் சந்தித்துள்ளனர். அப்போதும்கூட இந்த இயக்கத்தில் இருந்து பலர் வெளியேறியதுண்டு.

ஆனால், அண்ணா தி.மு.க.வுக்கு சோதனை ஏற்படும்போதெல்லாம், ‘இனிமேல் அண்ணா தி.மு.க.வுக்கு எதிர்காலமே இல்லை' என்று தாங்களாகவே முடிவெடுத்துவிட்டு, சிலர் ஆளுங்கட்சியில் அடைக்கலம் தேடி ஓடுகிறார்கள். இதுநாள்வரை இந்த இயக்கத்தால் அனுபவித்த தங்களுடைய சுகபோக வாழ்விற்கு பங்கம் வந்துவிடக்கூடாது என்பதற்காக, அவர்கள் யாரிடம் போய் கையேந்தி நின்றாலும் உண்மையான ஒன்றரை கோடி அண்ணா திமுக தொண்டர்களுக்கு எந்த கவலையும் இல்லை.

சென்ற இடத்தில் தற்போது இவர்கள் ஏற்றுக்கொண்டுள்ள தலைமைக்கு நாமாவளி பாடுவது பற்றியும் கவலையில்லை. எங்களைத் தூற்றுவதால் உங்களுக்கொரு வாழ்வு கிடைக்கிறது என்று சொன்னால், வாழ்க வசவாளர்கள்' என்ற பேரறிஞர் அண்ணாவின் சொற்களையே அவர்களுக்கு காணிக்கையாக்குகிறேன்.

மகானுபாவர்கள் பிரச்சாரம்

சென்ற இடத்தில் மரியாதை கிடைக்க வேண்டும்; மதிப்பு உயர வேண்டும் என்பதற்காக, இல்லாத ஒன்றை கழகத் தொண்டன் எவனும் நினைத்துப் பார்க்காத ஒன்றை, புரட்சித் தலைவர் மற்றும் புரட்சித் தலைவி வழியில் தீய சக்திகளை ஒழிக்க அல்லும் பகலும் பாடுபட்டு வரும், கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியாரும், ஒன்றரை கோடித் தொண்டர்களும் நினைக்காத ஒன்றை; திமுகவோடு சேர்ந்து ஆட்சி அமைக்க, எங்கள் பொதுச் செயலாளர் முயன்றதாக இந்த மகானுபாவர்கள் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

‘ஒரே பொய்யை திரும்பத் திரும்பச் சொன்னால் அது உண்மையாகிவிடும்' என்று செயல்பட்ட கோயபல்ஸ் என்றோ மறைந்துவிட்டான். ஆனால், அவனை நினைவுபடுத்துவதற்கென்றே பல கோயபல்ஸ்கள் இப்போது நம்மிடம் இருந்தே புறப்பட்டிருப்பது எண்ணிப் பார்க்க முடியாத ஒன்றாகும். இவர்கள் அனைவரும் இந்தப் பேரியக்கத்தைக் காப்பதில் உறுதுணையாக இருப்பார்கள் என்று நம்பித்தான் இவர்களோடு இதுநாள்வரை பயணித்தோம். ஆனால், தங்கள் சுயநலத்திற்காக இயக்கத்தைக் காட்டிக் கொடுப்பது மட்டுமல்லாமல், மனசாட்சிக்கு விரோதமாக அபாண்டமானதொரு குற்றச்சாட்டை எங்கள் கழகப் பொதுச் செயலாளர் மீது சுமத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நடந்து முடிந்த தமிழ் நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலில், அண்ணா தி.மு.க. சார்பில் 47 பேர் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு, அனைவரும் ஒன்றுகூடி கழகப் பொதுச் செயலாளரை சட்டமன்றக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்து தீர்மானம் நிறைவேற்றி கையெழுத்திட்டோம். அன்றில் இருந்து, 25 பேர் ஒன்றுகூடி மைனாரிட்டி த.வெ.க. அரசுக்கு ஆதரவாக வாக்களித்த நாள்வரை, இவர்கள் யாரிடமாவது திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு நாம் ஆட்சி அமைக்க முயற்சிக்கலாம் என்று கழகப் பொதுச் செயலாளர் தெரிவித்தார் எனக் கூறமுடியுமா?

இல்லாத ஒரு குற்றச்சாட்டை நம் இயக்கத்தின்மீது சுமத்திவிட்டுச் சென்று, கொறடா உத்தரவை மீறி வாக்களித்தவர்கள் திரும்ப வந்து வருத்தம் தெரிவித்து கடிதம் கொடுத்தபோது, கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் மீது சுமத்திய பழி தவறு என்று உணரவில்லையா?

இப்போது, தங்களின் நல்வாழ்விற்காக சொன்ன ஒரே பொய்யையே திரும்பத் திரும்பச் சொல்லி கழகத் தொண்டர்களின் நெஞ்சில் நஞ்சை விதைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. வாழவைத்த இந்த இயக்கத்திற்கு விசுவாசமில்லாமல், தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் மாற்றுக் கட்சியை நோக்கி ஓடுபவர்களுக்கு தமிழக மக்களும், கழகத் தோழர்களும் நேரம் வரும்போது தக்க பாடம் புகட்டுவார்கள்.

இந்த இயக்கத்தில் இருந்து ஓடிப்போக வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு செயல்படுபவர்களை தடுக்க முடியாது என்றாலும், பொய்யை பரப்பி ஆகாயத்தில் கோட்டை கட்ட முயற்சிப்பவர்களின் எண்ணம் கானல் நீராகத்தான் போகும்.

இவ்வாறு அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி கூறியுள்ளார்.

சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் பயங்கர வெடி விபத்து: பெண் தொழிலாளி பலி

விருதுநகர், ஜூலை 3–

சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் பலத்தக் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்ற பெண் தொழிலாளி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே உள்ள கோப்பையநாயக்கன்பட்டியில் அண்ணா திமுக மேற்கு மாவட்ட துணைச் செயலாளரும், சிவகாசி முன்னாள் ஊராட்சி ஒன்றியத் தலைவருமான சுப்பிரமணியனுக்கு சொந்தமான குருலட்சுமி என்ற பெயரில் பட்டாசு ஆலை செயல்பட்டு வருகிறது. இந்த ஆலையில் 60 க்கும் மேற்பட்ட பட்டாசுத் தயாரிப்பு அறைகள் உள்ளன. இந்த ஆலையில் 100 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

நேற்று காலை அந்த ஆலையில் பட்டாசு உற்பத்தி நடைபெற்று வந்தது. அப்போது ரசாயன மூலப்பொருட்களில் ஏற்பட்ட உராய்வுக்காரணமாக திடீரென பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. இதில் நான்கு தயாரிப்பு அறைகள் முற்றிலும் இடிந்து தரைமட்டமானதுடன், மேலும் 10 அறைகள் சேதமடைந்தன.

இது குறித்து தகவலறிந்த தீயணைப்புத்துறையினர், இரண்டு தீயணைப்பு வாகனங்களுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். எனினும், பட்டாசுகள் தொடர்ந்து வெடித்து சிதறியதால் தீயணைப்பு வாகனங்கள் உடனடியாக ஆலைக்குள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து, தண்ணீரைப் பீய்ச்சியடித்து தீயை அணைக்க முயன்றனர். பின்னர் நீண்ட நேர போராட்டத்திற்கு பிறகு தீக்கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இதனிடையே பட்டாசு ஆலை வெடி விபத்தில் சிவகாசி சிலோன் காலனியைச் சேர்ந்த ராஜம்மாள் (வயது 60) என்ற பெண் தொழிலாளி சுமார் 90 சதவீத தீக்காயங்களுடன் மீட்கப்பட்டார். அவர் உடனடியாக ஆம்புலன்ஸ் மூலம் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்தனர்.

பட்டாசு ஆலை விபத்து குறித்து தகவலறிந்த விருதுநகர் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கௌதம் கோயல் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். அத்துடன், விபத்திற்கான காரணங்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இந்த விபத்து குறித்து மல்லி காவல்நிலையத்தின் காவல்துறையினர் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவுச் செய்து தீவிர விசாரணை நடத்தினர்.

இந்நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ராஜம்மாள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இது தொடர்பாக மாரனேரி போலீசார் வழக்குப்பதிவு விசாரணை நடத்தி வருகின்றனர்.

கைப்பை மட்டும் எடுத்து வந்தால் 'இண்டிகோ' விமானத்தில் கட்டணச் சலுகை

புதுடெல்லி, ஜூலை 3

உள்நாடு மற்றும் வெளிநாட்டு விமானங்களில், கைப்பையுடன் மட்டும் பயணிக்க விரும்பும் பயணியருக்காக, 'இண்டிகோ லைட்' என்ற புதிய குறைந்த கட்டண திட்டத்தை 'இண்டிகோ' விமான நிறுவனம் அறிமுகப்படுத்திள்ளது.

நாட்டின் மிகப்பெரிய விமான போக்குவரத்து நிறுவனமாக, 'இண்டிகோ' உள்ளது. இந்நிறுவனம், 'எகானமி' எனப்படும், சாதாரண வகுப்பு பயணியருக்கு புதிய கட்டண திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.

வழக்கமாக, 'எகானமி' வகுப்புக்கு 7 கிலோ, 'கேபின் லக்கேஜ்' எனப்படும், கைப்பை மற்றும் 15 முதல் 20 கிலோ, 'செக் இன்' லக்கேஜ் எனப்படும், பெட்டிகளை தனியாக கொண்டு வரும் வசதி வழங்கப்படும்.

'இண்டிகோ'வின் 'லைட்' கட்டண திட்டத்தில் 7 கிலோ வரையிலான கைப்பை மட்டும் எடுத்துச் செல்வோருக்கு அடிப்படை கட்டணத்தை குறைத்துள்ளனர்.

இது குறித்து, 'இண்டிகோ' நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், 'குறைந்த பைகளுடன் பயணித்து, தங்களுக்கு தேவையான சேவைகளுக்கு மட்டும் கட்டணம் செலுத்த விரும்பும் பயணியருக்காக இந்த திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

பீகார், மத்தியபிரதேசம், குஜராத்தில் 30–ந்தேதி இடைத் தேர்தல்

கோர்ட்டில் வழக்கு உள்ளதால் தமிழகத்தில் காலியாக உள்ள 7 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்படவில்லை

புதுடெல்லி, ஜூலை.3–

பீகார், மத்தியபிரதேசம் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் தலா ஒரு தொகுதிக்கு வருகிற 30–ந்தேதி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு உள்ளது. கோர்ட்டில் வழக்கு உள்ளதாக தமிழகத்தில் காலியாக உள்ள 7 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்படவில்லை.

தமிழக சட்டசபைக்கு கடந்த ஏப்ரல் மாதம் 23–ந் தேதி நடந்த தேர்தலில் முதலமைச்சர் விஜய் சென்னை பெரம்பூர் தொகுதியிலும், திருச்சி கிழக்கு தொகுதியிலும் போட்டியிட்டார்.

போட்டியிட்ட இந்த 2 தொகுதிகளிலும் அவர் வெற்றி பெற்றார். இதனைத்தொடர்ந்து திருச்சி கிழக்கு தொகுதியை ராஜினாமா செய்தார். இதனால் அந்த தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டது.

இதன்பிறகு த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்ற பிறகு அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் 25 பேர் த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்தனர். இவர்களில் மதுராந்தகம் மரகதம் குமரவேல், பெருந்துறை ஜெயக்குமார், தாராபுரம் சத்தியபாமா மற்றும் அம்பாசமுத்திரம் இசக்கி சுப்பையா ஆகியோர் தங்களது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து த.வெ.க.வில் இணைந்தனர்.

இதன்காரணமாக மேற்கண்ட 4 தொகுதிகள் காலியாகின. இதனைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர் மற்றும் எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோரும் தங்களது பதவிகளை ராஜினாமா செய்து த.வெ.க.வில் இணைந்துள்ளனர். இவர்கள் ராஜினாமா செய்ததால் விராலிமலை மற்றும் கரூர் ஆகிய தொகுதிகளும் காலியாகி உள்ளது. மொத்தத்தில் தமிழ்நாட்டில் 7 சட்டசபை தொகுதிகள் காலியாக உள்ளன.

30–ந்தேதி இடைத்தேர்தல்

இந்நிலையில் இந்திய தேர்தல் கமிஷன் நேற்று ஒரு இடைத்தேர்தல் அறிவிப்பை வெளியிட்டது. அதாவது பீகாரில் காலியாக உள்ள பாங்கிபூர் சட்டசபை தொகுதி, மத்திய பிரதேசத்தில் காலியாக உள்ள தாதியா சட்டசபை தொகுதி மற்றும் குஜராத்தில் காலியாக உள்ள மஞ்சல்பூர் சட்டசபை தொகுதி ஆகிய 3 சட்டசபை தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது.

இந்த இடைத்தேர்தல் வருகிற 30–ந் தேதி நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் 6–ந்தேதி தொடங்கி, 13–ந் தேதி வரை நடக்கிறது. 30–ந் தேதி வாக்குப்பதிவு நடத்தப்பட்டு ஆகஸ்டு மாதம் 3–ந் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

ஆனால் தமிழகத்தில் 7 தொகுதிகள் காலி என அறிவிக்கப்பட்டு இருந்தாலும், அந்த தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்படவில்லை. மேற்கண்ட 7 தொகுதிகளில் 6 தொகுதிகளின் காலி நிலவரம் சர்ச்சைக்குள்ளாகி இருப்பதாலும், அது தொடர்பான வழக்கு கோர்ட்டில் நிலுவையில் இருப்பதாலும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட வில்லை என தெரிகிறது.

6 தொகுதிகளுக்கு இடைத் தேர்தல் நடத்தக்கூடாது தேர்தல் கமிஷனில் அண்ணா தி.மு.க. மனு

புதுடெல்லி, ஜூலை.3

மதுராந்தகம், விராலிமலை, கரூர் உள்பட 6 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்தக்கூடாது என இந்திய தேர்தல் கமிஷனில் அண்ணா தி.மு.க. எம்.பி. இன்பதுரை நேற்று நேரில் மனு அளித்தார்.

அண்ணா தி.மு.க.வில் இருந்து சி.விஜயபாஸ்கர் மற்றும் எம். ஆர்.விஜயபாஸ்கர் உள்பட 6 எம். எல்.ஏ.க்கள் விலகி த.வெ.க.வில் சேர்ந்துள்ளனர். இதனை எதிர்த்து, அண்ணா தி.மு.க. எம்.பி. இன்பதுரை டெல்லியில் உள்ள தலைமை தேர்தல் கமிஷன் அலு வலகத்தில் நேற்று மனு அளித்தார்.

அந்த மனுவில் வலியுறுத்திய விவரங்கள் குறித்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

தேர்தலுக்கு பிறகு, முதல்அமைச்சர் விஜய்யே நேரடியாக சென்று குதிரை பேரத்தில் ஈடுபட்டார். இதனை எல்லோருமே பார்த்தோம். அதன்பிறகு நம்பிக்கை வாக்கெடுப்பில் அ.தி. மு.க. கொறடா உத்தரவை மீறி 25 எம். எல்.ஏ.க்கள் த.வெ.க.வுக்கு ஆதரவாக வாக்களித்தனர். பின்னர் அதில் 21 பேர் வருந்தி மன்னிப்பு கடிதம் கொடுத்தனர். 4 பேர் தரவில்லை. அவர்கள் த.வெ.க.வில் இணைந்தனர்.

அவர்களது ராஜினாமாவை சபாநாயகர் ஏற்றது தவறு. என்ன காரணத்துக்காக ராஜினாமா செய்கிறீர்கள்? என தனித்தனி யாக விசாரித்து இருக்க வேண்டும். அதை செய்யவில்லை.

ராஜினாமாவை ஏற்றதே தவறு என்றிருக்கும் சூழ்நிலையில், மன்னிப்புக் கடிதம் கொடுத்து வருத்தம் தெரிவித்த விராலிமலை விஜயபாஸ்கர், கரூர் விஜயபாஸ்கர் ஆகிய 2 பேரும் த.வெ.க.வில் இணைந்தது அரசியலமைப்பு சட்டத்தின் கண்ணில் மண்ணை தூவிவிட்டு, அதை கேலிக்கூத்து ஆக்கிய செயல் ஆகும்.

இதன் மூலம் மதுராந்தகம், விராலிமலை, கரூர் உள்ளிட்ட 6 தொகுதிகள் காலியாகி உள்ளன. திருச்சி கிழக்கை விட்டு விடுங்கள். இந்த தொகுதிகளுக்கு 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். கட்சித்தாவல் செய்யக்கூடாது என்று சொல்லும் அரசியலமைப்பு சட்டத்தின் இன்னொரு பிரிவு காலியான தொகுதிகளுக்கு 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என சொல்கிறது. அப்படி தேர்தல் நடந்தால் இந்த 6 பேரும் போட்டியிடலாம். அப்படியென்றால் அரசியலமைப்பு சட்டம் ஏன் இருக்கிறது?.

இந்த 6 இடங்களும் செயற்கையாக உருவாக்கப்பட்ட காலியிடங்கள். சர்ச்சைக்குரிய வகையில் காலியான இடங்களில் தேர்தல் நடத்தக்கூடாது என்பதுதான் எங்களது நிலைப்பாடு. இது தொடர்பாக சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்து உள்ளோம். வருகிற 13ந்தேதி அந்த வழக்கு விசாரணைக்கு வருகிறது. வழக்கு நிலுவையில் இருந்தால் தேர்தல் நடத்தமாட்டோம் என்று மற்றொரு வழக்கில் தேர்தல் கமிஷன், சுப்ரீம் கோர்ட்டில் சொல்லி இருக்கிறது. லட்சத் தீவு எம்.பி. வழக்கிலும் இதே நிலைதான்.

எனவே, சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின்படி இந்த 6 தொகுதி களுக்கும் இடைத்தேர்தல் நடத்தக் கூடாது என தேர்தல் கமிஷன் அளித்த மனுவில் சொல்லி யிருக்கி றோம்.

சி.வி. சண்முகத்திற்கு உடனடியாக ஆயுதம் ஏந்திய போலீஸ் பாதுகாப்பு: டிஜிபிக்கு ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜூலை 3–

முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகத்துக்கு உடனடியாக ஆயுதம் ஏந்திய பாதுகாப்பு வழங்க வேண்டும் என தமிழ்நாடு டிஜிபிக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

அண்ணா திமுகவை சேர்ந்த முன்னாள் அமைச்சரும், தற்போதைய எம்.எல்.ஏவுமான சி.வி.சண்முகம் சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்திருந்த மனுவில், "கடந்த 2006ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின்போது என்னை கொலை செய்ய எதிர்க்கட்சியினர் முயற்சித்தனர். அப்போது எனது சகோதரரும், மைத்துனரும் கொலை செய்யப்பட்டனர். இந்த சம்பவத்துக்குப் பின், எனக்கும், எனது வீட்டுக்கும் போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இந்தநிலையில் 2021ம் ஆண்டு பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது. இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த நீதிமன்றம், அச்சுறுத்தல் உள்ளதால் பாதுகாப்பு வழங்குவது குறித்து மறுபரிசீலனை செய்ய உத்தரவிட்டிருந்தது. தற்போது தொடர்ச்சியாக மிரட்டல்கள் வருவதால் இதுசம்பந்தமாக சென்னை, விழுப்புரம் மாவட்ட காவல் நிலையங்களில் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது சம்பந்தமான வழக்குகளையும், புகார்களையும் சிபிஐக்கு மாற்ற உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன் பிறப்பித்துள்ள உத்தரவில், தொடர்ச்சியாக மிரட்டல்கள் வருவது குறித்து வெவ்வேறு விதமான குற்றச்சாட்டுகளுடன் சி.வி.சண்முகம் புகார் அளித்துள்ளதால் அதனை சிபிஐக்கு மாற்ற வாய்ப்பில்லை. தொடர்ச்சியாக கொலை மிரட்டல் வருவதால் தனக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவையை சி.வி. சண்முகம் நிரூபித்துள்ளார். எனவே அவருக்கு உடனடியாக ஆயுதம் ஏந்திய போலீஸ் பாதுகாப்பை டிஜிபி வழங்க வேண்டும்" என கூறியுள்ளார்.

சாலை முறைகேடு புகாரில் லஞ்ச ஒழிப்புத்துறை சம்மன்: முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு விசாரணைக்கு ஆஜராகவில்லை

சென்னை, ஜூலை 3–

சாலை முறைகேடு புகார் தொடர்பாக முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணைக்கு ஆஜராகவில்லை.

கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சராக எ.வ.வேலு இருந்தபோது கரூரில் சாலை அமைப்பதில் பெரும் முறைகேடு நடைபெற்றதாக கடந்த 2022ம் ஆண்டு புகார் அளிக்கப்பட்டது. 7 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்தில் எந்த ஒரு பணியும் நடைபெறாத நிலையில் ஒப்பந்ததாரருக்கு 3.2 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டதாக புகாரில் குறிப்பிடப்பட்டிருந்து.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குனராக பொறுப்பேற்ற அருண், இந்த புகார் மனு மீது வழக்குப்பதிவு செய்ய உத்தரவிட்டார். அதன்பேரில் கடந்த மாதம் 23ந்தேதி அன்று வழக்குப்பதிவு செய்யப்பட்டது. வழக்குப்பதிவு செய்தவுடன் அதிரடி சோதனை வேட்டையில் லஞ்ச ஒழிப்பு போலீசார் இறங்கினார்கள். அதன்படி சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுவின் வீடு உள்பட 21 இடங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் கடந்த மாதம் 25ந்தேதி அன்று சோதனையில் ஈடுபட்டனர். இந்த சோதனையில் கணக்கில் வராத ரூ.40 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டதாக லஞ்ச ஒழிப்பு போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் வழக்கு தொடர்பான விசாரணைக்கு 3ந்தேதி (அதாவது இன்று) ஆஜராகுமாறு எ.வ.வேலுவுக்கு லஞ்ச ஒழிப்பு போலீசார் சம்மன் அனுப்பினர். இந்த நிலையில், எ.வ.வேலு இன்று ஆஜராகவில்லை. உடல்நிலை சரியில்லாததால் அவருக்குப் பதிலாக அவரது வழக்கறிஞர் ஆஜராகி, திங்கட்கிழமை அல்லது வேறு ஒரு நாளில் ஆஜராக கால அவகாசம் கோரியுள்ளதாக கூறப்படுகிறது.

SALONA COTSPIN LIMITED

Salona Cotspin LIMITED

CIN - L17111TZ1994PLC004797

Registered Office : SF NO 74/12 & 75/3, Sathy Road, Pungampalli Village, Sathyamangalam – 638402

Website – www.salonacotspin.com, Phone – 0422-2454415

பௌதீகப் பங்குச் சான்றிதழ்களைப் பரிமாற்றம் செய்வதற்கான கோரிக்கைகளை மறுசமர்ப்பிப்பதற்கான சிறப்புச் சாளரம்

2026 ஜனவரி 30 தேதியிட்ட SEBI சுற்றறிக்கை எண். HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026-இன் படி, பௌதீகப் பங்குச் சான்றிதழ்களைப் பரிமாற்றம் செய்வதற்கான கோரிக்கைகளை மறுசமர்ப்பிப்பதற்காக, 2026 பிப்ரவரி 5 முதல் 2027 பிப்ரவரி 4 வரையிலான ஓராண்டு காலத்திற்கு ஒரு 'சிறப்புச் சாளரம்' (Special Window) திறக்கப்பட்டுள்ளது என்று பங்குதாரர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. 2019 ஏப்ரல் 1 என்ற காலக்கெடுவிற்கு முன்னதாகவே சமர்ப்பிக்கப்பட்டு, ஆவணங்கள் அல்லது செயல்முறையில் இருந்த குறைபாடுகள் காரணமாகவோ அல்லது பிற காரணங்களினாலோ நிராகரிக்கப்பட்ட/திரும்ப அனுப்பப்பட்ட/கவனிக்கப்படாமல் விடப்பட்ட பரிமாற்றக் கோரிக்கைகளுக்கு மட்டுமே இச்சலுகை பொருந்தும். இச்சிறப்புச் சாளரக் காலத்தில், பரிமாற்றத்திற்காக மறுசமர்ப்பிக்கப்படும் பங்குகள் அனைத்தும் 'டிமெட்டீரியலைஸ்டு' (மின்னணு) வடிவில் மட்டுமே செயலாக்கப்படும். தகுதியுள்ள பங்குதாரர்கள் தங்கள் பரிமாற்றக் கோரிக்கையையும், அதற்கான தேவையான ஆவணங்களையும், நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்குப் பரிமாற்ற முகவரான ("RTA") MUFG Intime India Private Limited-இடம் சமர்ப்பிக்கலாம்.

இரண்டாவது 100 நாட்கள் பிரச்சாரம் – "சக்ஷம் நிவேஷக்" (Saksham Niveshak): செலுத்தப்படாத/கோரப்படாத ஈவுத்தொகைகள் IEPF-க்கு மாற்றப்படுவதைத் தடுக்கும் நோக்கில், KYC மற்றும் பிற தொடர்புடைய விவரங்களைப் புதுப்பித்தல் மற்றும் பங்குதாரர்களுடனான ஈடுபாட்டை மேம்படுத்துதல்.

செலுத்தப்படாத அல்லது கோரப்படாமல் உள்ள ஈவுத்தொகைகளைத் திரும்பப் பெறுவதை எளிதாக்கும் வகையில், KYC மற்றும் அது தொடர்பான விவரங்களைப் புதுப்பிப்பதற்காக, முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதியம் (IEPF) தனது இரண்டாவது 100 நாட்கள் பிரச்சாரத்தை "சக்ஷம் நிவேஷக்" (Saksham Niveshak) என்ற தலைப்பில் தொடங்கியுள்ளது. இப்பிரச்சாரமானது ஏப்ரல் 01, 2026 முதல் ஜூலை 09, 2026 வரையிலான 100 நாட்கள் காலத்திற்கு நடைபெறுகிறது. செலுத்தப்படாத அல்லது கோரப்படாமல் உள்ள ஈவுத்தொகைகளைக் கொண்டுள்ள பங்குதாரர்கள், தங்கள் KYC மற்றும் வாரிசு நியமன விவரங்களைப் புதுப்பிக்கவோ; அல்லது செலுத்தப்படாத ஈவுத்தொகைகள் மற்றும் பங்குகள் தொடர்பாக ஏதேனும் சிக்கல்கள் அல்லது கேள்விகள் இருப்பின், நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்ற முகவரைத் (RTA) தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இணையத்தில் கிடைக்கும் படிவங்களைப் பெறுவதற்கு, அதற்கான QR குறியீட்டை ஸ்கேன் செய்யலாம்.

மேற்கண்ட பிரச்சாரத்தின் விவரங்கள் மற்றும் KYC விவரங்களைப் புதுப்பித்தல் / பதிவு செய்வதற்கான நடைமுறை ஆகியவை நிறுவனத்தின் வலைத்தளமான https://www.salonacotspin.com/investors/இல் கிடைக்கின்றன

பதிவாளர் & பங்கு பரிமாற்ற முகவர்:
MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்
முகவரி: சூர்யா, 35, மேஃப்ளவர் அவென்யூ, செந்தில் நகர் பின்புறம், சௌரிபாளையம் சாலை, கோயம்புத்தூர் 641028, தமிழ்நாடு.
மின்னஞ்சல்: coimbatore@in.mpms.mufg.com, தொலைபேசி: 0422-4958995, 2539835.

சலோனா காட்ஸ்பின் லிமிடெட்
Sd/-
ராஜ்குமாரி ரா
நிறுவன செயலாளர்

இடம்: கோயம்புத்தூர்
தேதி: ஜூலை 3, 2026